பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 04 | புதன்கிழமை | 17.04.2024 | அதிர்வு 260

## பாலித்த தெவரப்பெரும மின் தாக்கி காலமானார்



(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

# சஜித் கட்சியின் எம்.பிக்களை வளைக்கும் ரணிலின் முயற்சி வெற்றியளிக்கவில்லை



ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 17 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்பக்கம் வளைத்துப் போடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி இன்னும் வெற்றியளிக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

குறித்த நபர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினத்துக்கு மேடையேற்றும் நோக்கிலேயே நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. எனினும், ஓரிருவர் மாத்திரமே ஜனாதிபதி ரணிலுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

எதிரணியில் இருந்து ஆதரவு வழங்கும் உறுப்பினர்களைக் கூடிய விரைவில் வளைத்துப் போடுமாறு ஜனாதிபதித் தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சியால் தெரிவு 06▶

## ஜனாதிபதித் தேர்தலில்

# மக்கள் பேராதரவுடன் ரணிலிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும்

## ஐ.தே.கவின் தவிசாளர் வஜிர கோரிக்கை



**“இவ்வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் அமோக ஆணையுடன் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும்.”**

**இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.** 06▶

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலுக்கு வாய்ப்பில்லை

## மொட்டு எம்.பி. திஸாநாயக்க நம்பிக்கை

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலைப் பெறுவதற்கான முயற்சி வெற்றியளிக்காது எனத்தான் நம்புகின்றார் என்று ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார் .

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“அரசமைப்பினர் பிரகாரம் செப்டெம்பர், ஒக்டோபர் இடைப்பட்ட காலப் பகுதியில் ஜனாதிபதித் 06▶






ஊடகத்துறையைப் பொறுத்தவரை தமிழகத்தின் ‘என்வலப்’ கலாச்சாரம் யாழ்ப்பாணத்துக்கும் மெல்லத் தொற்றத் தொடங்கிவிட்டது.

தனி ஒரு ஊடகத்துக்கு பணிசெய்யும் ஊடகவியலாளர்கள் இப்போது குறைவு. எல்லாம் கூட்டம், குழுமமாக பல நிறுவனங்களுக்கும் ஒரே சமயத்தில் பணி செய்பவர்கள். எப்படியாயிலும் செய்தி வந்தால் சரி என்ற நிலையில் இருக்கும் ஊடகங்களும், தமது செய்தியாளர்கள் எப்படி செயல்படுகின்றார்கள், பின்னணியாது, என்ன நடக்கின்றது என்று கண்டு கொள்வதில்லை. தேடியும் பார்ப்பதில்லை. நெருக்கடியில் இருக்கும் ஊடகங்களினால் செய்தியாளர்களை சரிவரக் ‘கவனிக்கவும்’ முடிவதில்லை. 06▶

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட சு.கவினர் கோரிக்கை விடுத்தனர்

## விஜேதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தன்னிடம் கோரிக்கை விடுத்தனர் என நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்படி, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து அடுத்த சில வாரங்களில் தீர்மானம் எடுப்பேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள எந்தவொரு அரசியல் கட்சியின் மீதும் பொதுமக்களுக்கு நம்பிக்கையில்லை எனவும் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.



# வயாவிளானில் இருந்து யாழுக்கு பஸ் சேவை!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

வட பிராந்திய இலங்கை போக்கு வரத்து சபையின் ஏற்பாட்டில் வலிகாமம் வயாவிளான் திக்கம்புரை டெயிலர் கடை சக்தியிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்கான புதிய பஸ் சேவையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இப்பிரதேச மக்கள் போக்குவரத்து பிரச்சினை சம்பந்தமாக அமைச்சரின் கவனத்திற்கு அண்மையில் கொண்டு வந்திருந்தனர்.

இந்த பஸ் சேவை வயாவிளான் சுதந்திரபுரம், வயாவிளான் மத்திய கல்லூரி, ஈழகேசரி பொன்னையா வீதி, குரும்பசிட்டி, கட்டுவான் சந்தி ஊடாக தெல்லிப்பளை வைத்தியசாலையை அடைந்து காங்கேசன்துறை வீதியினூடாக யாழ்ப்பாண மாநகரத்தை அடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சுவிஸில் வசிக்கும் தமிழ்ப் பெண்ணை ஏமாற்றிய தமிழ்ப் பொலிஸ் அலுவலர்!

யாழ்ப்பாணத்தில் இருந்து புலம் பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசிக்கும் பெண்ணை திருமணம் செய்வார் எனக் கூறி சுமார் 50 லட்சம் ரூபாவை மோசடி செய்தார் எனப்பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசித்து வருகின்றார். அவருக்கு திருமணமாகி பிள்ளைகள் உள்ள நிலையில் சுவிஸ் நாட்டில் கணவனைப் பிரிந்து பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார்.

இந்நிலையில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அந்த பெண் யாழ். வந்திருந்த போது, பெண்ணின் பூர்வீக சொத்துக்கள் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகள் சம்பந்தமாகப் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யச் சென்று இருந்தார்.

முறைப்பாடு செய்ய சென்ற நேரத்தில் பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்தப் பழக்கம் பெண் வெளிநாடு சென்ற பின்னரும் தொடர்ந்து உள்ளது. ஒரு கட்டத்தில் அது காதலாக மலர்ந்துள்ளது.

அதனை அடுத்து சுவிஸ் நாட்டுப் பெண், இங்குள்ள பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு பணம், நகை என்பவற்றுடன் அன்பளிப்பு பொருள்கள் எனப் பலவற்றை வழங்கி வந்துள்ள நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அப்பெண்னை ஏமாற்றினார் எனக் கூறப்படுகின்றது. இதையடுத்தே அந்தப் பெண் முறைப்பாடு செய்திருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

## முன்னாள் இராஜாங்க அமைச்சர்

# பாலித்த தெவரப்பெரும மின் தாக்கி காலமானார்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித்த தெவரப்பெரும நேற்று பிற்பகல் காலமானார்.

மத்துகமையில் உள்ள அவரது தோட்ட மொன்றில் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானதன் பின்னர் அவர் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டதையடுத்து காலமானார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

1960 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி பிறந்த பாலித்த தெவரப்பெரும 2010 - 2020 காலப்பகுதியில் நாடாளு மன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

அன்னார் உள்நாட்டலுவல்கள் மற்றும் கலாசார பிரதியமைச்சராகவும் வனஜீவரா சிகள் இராஜாங்க அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.





# கிணற்றுக்குள் பாய்ந்த ஓட்டோ ஒரே குடும்பத்தில் எழுவர் காயம்

குருநாகல்–பொல்கஹவெலயில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 07 பேர் காயமடைந்துள்ளனர்.

கல்வெல்ல பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து கிணற்றில் வீழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்களில் தாய், தந்தை, பாட்டி மற்றும் 04 குழந் தைகள் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.சாரதி யின் கவனயீனமே விபத்திற் கான காரணமாக இருக்கலாம் என பொலி ஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# மகனுடன் சேர்ந்து மரதன் ஓடிய தந்தை மயங்கி விழுந்து மரணம்

பெல்மடுல்ல படலந்த பிரதேசத்தில் நடைபெற்ற புத்தாண்டு தின மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட மகனை ஊக்குவிப்பதற்காக மகனுடன் இணைந்து ஓடிய தந்தை திடீரென மயக்கமடைந்து, வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

60 வயதான நபரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

மேலதிக விசாரணைகள் நடைபெற்று வரு கின்றன.





# நுவரெலியா சுற்றுலா துறை மறுமலர்ச்சி குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி நேரடி சுற்றுலா விஜயம்

நுவரெலியாவின் எழில் மிக்க மலைகளை அண்மித்துக் காணப்படும் சுற்றுலாத் தொழில்துறையின் மறுமலர்ச்சி தொடர்பில் ஆராய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நுவரெலியா – உடபுசலாவை – கோர்ட் லொட்ஜ் தோட்டத்திற்கு நேரடி விஜயம் மேற்கொண்டிருந்தார்.

Peko Trail பாதையினூடாக ஜனாதிபதி நடைபயணமாக இப்பகுதிளை மேற்பார்வை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'Peko Trail' என்பது இலங்கையின் மத்திய மலைப்பகுதிகளூடாகச் செல்லும் 300 கிலோ மீற்றர் மலையேறும் பாதையாகும். ஆசியாவின் மிக ரகசியமான பாதைகளில் இதுவும் ஒன்றாகும்.

ீநமழ வுசயடை என்று அறியப்படும் இந்தப் பாதையானது கண்டியில் ஆரம்பித்து அட்டன் ஊடாக ஹோட்டன் தென்ன தேசிய வனப் பூங்கா வரையில் செல்கிறது. அதன் பின்னர் ஹப்புத்தலை – எல்ல ஊடாக பயணித்து அழகிய நுவரெலியா நகரத்தில் பயணத்தை நிறைவு செய்யலாம். இந்த பாதை பிரித்தானிய காலனித்துவக் காலத்தில் பெருந்தோட்டங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்குச் செல்ல பயன்படுத்தப்பட்டுள்ளது.

Peko Trail பாதையினூடாக 3.2 கிலோ மீற்றர் தூரத்திற்கு நடைப் பயணமாக சென்ற ஜனாதிபதி கோர்ட் லொட்ஜ் தோட்ட மக்களுடனும் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

அப்பகுதி மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சிறப்பு வரவேற்பளித்ததோடு, ஜனாதிபதி அங்குள்ள மக்களுக்கு தமிழ், சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

பிரவுன்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் கோர்ட் லொட்ஜ் தோட்டம் 264 ஹெக்டயார் பரப்பை கொண்டுள்ளது. அங்கு 349 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்த விஜயத்தின் போது தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் கல்வி, சுகாதார பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளார். உயர்தரத்தின் பின்னரான அப்பகுதி பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் ஆராய்ந்தார்.

அதனையடுத்து தோட்ட மக்களின் வீட்டுப் பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

கோர்ட் லொட்ஜ் தோட்டத்தில் “Light Bright” என்ற நாமத்திலான தேயிலை வகை உற்பத்திச் செய்யப்படுவதோடு, அங்கு சுற்றுலா விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி தொழிற்சாலை ஊழியர்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இப்பகுதியின் ஊடாக மலையேறும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுவையான தேநீர் கோப்பை ஒன்றை அருந்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்தும் கவனம் செலுத்தினார்.

பின்னர் Peko Trailபாதையினூடாக சுற்றுலா தொழில்துறையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

Peko Trail வேலைத்திட்டத்தின் ஸ்தாபகரான இலங்கையின் மலையகப் பகுதிகளில் பல வருடங்களாக சுற்றுலா பயணங்களை மேற்கொண்டிருக்கும் சுற்றுலா ஆலோசகர் மிகோல் குணாட் உலகின் மிகச் சிறந்த மலையேறுதல் களமாக இலங்கையை உலக வரைபடத்தில் இணைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

Peko Trail வழிப்பாதையின் ஊடாக சுற்றுலா பயணத்தை மற்கொள்ளும் பிரயாணிகளுக்கு இந்நாட்டின் வரலாறு, லாச்சாரம், உள்நாட்டு உணவு வகைகள் உள்ளிட்ட பல்வேறு அனுபவங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைக்கும். Peko Trail சுற்றுலா வழிப்பாதை 22 கட்டங்களை கொண்டுள்ளதோடு, ஒரு நாள் அல்லது பல நாள்களாக பயணிக்கவும் முடியும்.

இலங்கையின் தேசிய சுற்றுலா வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக முன்னெடுக்கப்படும் Peko Trail திட்டத்திற்கு ஐரோப்பியச் சங்கம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளதோடு, நிலையான சுற்றாடல் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களும் அதனில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அருமையான சுற்றுலா அனுபவத்தை தேடிச் செல்லல் உள்ளிட்ட புதிய சுற்றுலாச் செயற்பாடுகளை இலங்கைக்குள் வலுப்படுத்தல், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

Peko Trail வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க உதவியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மிகேல் குணாட் நன்றி தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத் துறையில் புதிய மாற்றத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.













# யாழ். சிறையிலிருந்து தப்பியோடிய கைதிகள் இருவர் உடனேயே கைது




யாழ். சிறைச்சாலையில் இருந்து வழக்கு விசாரணைக்காக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதிகளில் இருவர் தப்பியோடிய நிலையில், கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டுக் குற்றச்சாட்டிற்காக ஒரு வருட சிறைத்தண்டனை பெற்று வந்த கைதியும், விளக்கமறியல் கைதி ஒருவருமே நேற்றுக் காலை தப்பியோடினர்.

உடனடியாக செயற்பட்ட சாவகச்சேரி பொலிஸார், 30 நிமிடங்களுக்குள் இருவரையும் கைது செய்து மீண்டும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது, தப்பியோடிய குற்றத்திற்காக இருவருக்கும் தலா 6 மாத சாதரண சிறைத்தண்டனையும், தலா 1500 ரூபா தண்டப்பணமும் விதித்து நீதிவான் உத்தரவிட்டார்.தண்டப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலதிகமாக மேலுமொரு மாத கால சிறைத்தண்டனை அனுப விக்க நேரிடும் எனவும் சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் ஏ. யூட்சன் உத்தரவிட்டுள்ளார்.





# பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் நாணய நிதியப் பிரதிநிதிகள் பாராட்டு

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகமுரா உள்ளிட்ட குழுவினர் இடையே கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் அரையாண்டு மாநாட்டின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமையிலிருந்து முன்னேறுவதற்காக சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் சிறப்பான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பில் நாணய நிதியப் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் இலங்கை அதிகாரிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தனது எக்ஸ் தளத்தில் இதனைப் பதிவிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இலங்கை அடைந்த வெற்றியை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார் என அமைச்சரின் எக்ஸ் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமீபத்திய சமூக - பொருளாதார முன்னேற்றங்கள், சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் பாரிய பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் திட்டங்களை தொடர்வதற்கான இலங்கை அதிகாரிகளின் அர்ப்பணிப்பு தொடர்பில் அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதன்போது தெளிவுபடுத்தியிருந்தார்.

இதேவேளை, ஷெஹான் சேமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனையும் சந்தித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணைக்கான மீளாய்வுகளை நிறைவு செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பரமேஸ்வரன் ஐயரையும் அரையாண்டு மாநாட்டின் போது சந்தித்துக் கலந்துரையாடினார் என ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

உலக வங்கியின் உள்ளக மறுசீரமைப்புகளும் மாற்றங்களும் இலங்கை போன்ற நாடுகளுக்கு எவ்வாறு பயனளிக்கும் என்பது குறித்து பரமேஸ்வரன் ஐயர் விளக்கமளித்துள்ளார். இலங்கைக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவோம் என அவர் உறுதியளித்துள்ளார்.

இதனிடையே, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உள்ளிட்ட குழுவினர் சர்வதேச புரிந்துணர்விற்கான பொருளாதார பேரவையின் கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அதனால் தம்மை ஊடகவியலாளர் என கூறிக் கொள்ளும் பலரும் கிடைக்கும் இடத்தில் அறவிட்டு அல்லது அள்ளிக் கொள்கிறார்கள்.

அத்தகையோர் காட்டில் இந்த வருடம் நல்ல மழை.

2024 ஆம் ஆண்டு பிறந்த போது யாழ் நகரத்தில் ஒரு விடுதியில் நல்ல விருந்தோடு தலா பத்தாயிரம் ரூபா என் வலப் அன்பளிப்பு ஓர் அணியினருக்கு.

சித்திரை புத்தாண்டை ஒட்டி 20,000 ரூபா அன்பளிப்புடன் தியேட்டரில் கவனிப்பு. அதேவேளை புத்தாண்டு தினத்தில் சுன்னாகத்திலும் தலா பத்தாயிரம் ரூபா என்வலப் கவனிப்பு - கைவிஷேசம் என்ற பெயரில். ஓரிருவருக்கு அல்ல ஓர் அணியினருக்கு.

தியேட்டரில் இடம்பெற்ற கைவிசேஷம் வழங்கும் நிகழ்வில் ஊடகவியலாளர்களுக்கு வீட்டுத் திட்டம் பற்றியும் அறிவிக்கப்பட்டதாம். மறுநாள் இருபதுக்கும் குறையாத விண்ணப்பங்கள் குவிந்தன என்று தெரிகிறது.

ஒரே ஒரு நிறுவனம் மட்டும் தனது உறுப்பினர் ஒருவர் இப்படி என்வலப் பெற்றமையை உறுதி செய்து கொண்டு அவரைப் பணியில் இருந்து நிறுத்தியதாகவும் தகவல் உண்டு.

அண்மையில் வடமராட்சியில் சுமந்திரன் எம்.பியிடம் நல்ல நாளுக்கு கைவிசேஷம் வாங்கிய ஆதரவாளர்கள் வரிசையில் ஊடகவியலாளர்களின் தலைகளையும் காண முடிந்தது.

சில பெருந்தலை ஊடகவியலாளர்கள் தூதரகங்களிடமும் புலனாய்வு தரப்புகளிடமும் பெருந்தொகையாக உருவும் போது உதிரிகள் என்வலப் வாங்குவது தவறா என்று ஒரு நண்பர் கேட்டார்.

என்வலப் கொடுப்போரை தர்ம தேவர்கள் என்று புகழ வேண்டியதுதான்....!

## சஜித் கட்சியின் எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)
செய்யப்பட்டுள்ள நிறுவனம் ஆலோசனை வழங்கியுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், எதிரணி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் வஜிர அபேவர்தன, சாகல ரத்னாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

## மக்கள் பேராதரவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டு மக்கள் எவரும் பட்டினியால் வாடாமல் வாழக்கூடிய சூழ்நிலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கி வருகின்றார். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் அமோக ஆணையுடன் அவரிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும்.

நாடு தற்போது பயணிக்கும் பாதையை மாற்ற முற்பட்டால் பாரிய நெருக்கடி நிலைமை உருவாகக்கூடும். தனி ஒரு ஆளாக முழு நாட்டையும் பாதுகாக்கக்கூடிய ஆளுமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது." - என்றார்.

# பெரிய வெங்காயம் இறக்குமதி தொடர்பில் இன்று தீர்மானம்




இந்தியாவில் இருந்து பெரிய வெங்காயத்தை அரசாங்கத்தின் ஊடாக இறக்குமதிய செய்வதா அல்லது தனியார் மூலம் இறக்குமதி செய்வதா என்பது தொடர்பில் இன்று தீர்மானிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.


அது தொடர்பில் இன்று விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

10,000 மெட்ரிக் தொன் பெரிய வெங்காயத்தை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்கு இந்தியா அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில், பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்ததன் மூலம், நாட்டில் பெரிய வெங்காயத்-தின் விலையும் சடுதியதாக அதிகரித்தது.

இதற்கிடையில், இறக்குமதி செய்யப்படும் இந்திய பெரிய வெங்காயத்தை நாட்டிற்கு கொண்டு வருவதற்கு 10 முதல் 15 நாள்கள் வரையாகும் என அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# சர்வோதய ஸ்தாபகர் ஆரியரத்ன பிரிந்தார்



சர்வோதய அமைப்பின் ஸ்தாபகர் கலாநிதி ஏ.டி ஆரியரத்ன நேற்று காலமானார்.

92 வயதான இவர் உடல் நலக்குறைவால் காலமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலமானார்.

1931ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதி காலி மாவட்டத்தின் உனவடுன பிரதேசத்தில் பிறந்த ஏ.டி ஆரியரத்ன, இலங்கை அரசியலில் பல்வேறு திருப்பங்களுக்கு காரணமாக அமைந்தவராவார்.

சமூக அபிவிருத்தியிலும் தொடர்ச்சியான செயற்பாட்டாளராக ஏ.டி.ஆரியரத்ன அறியப்பட்டவர்.

## ஜனாதிபதித் தேர்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதி நினைத்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தலாம். அவ்வாறு இல்லாவிட்டால் 113 எம்.பிக்கள் இணைந்து யோசனையொன்றை வழங்கினால் முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாம். இது சவாலுக்குரிய விடயம். எனவே, அந்த முயற்சி கைகூடாது என்றே கருதுகின்றேன்.

அதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மொட்டுக் கட்சி ஐக்கியமாகவே முடிவெடுக்க வேண்டும். கட்சி எடுக்கும் முடிவுக்கு நான் கட்டுப்படுவேன்." - என்றார்.



# ஆறு அலுவலக ரயில்கள் இரத்து

அலுவலக ரயில் வேவைகள் ஆறு நேற்று இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ரயில் சாரதிகளும் கட்டுப்பாட்டாளர்களும் கடமைக்கு தாமதமாக வருகை தந்தமையே இதற்கான காரணம் என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் என்.ஜே. இதிபொலகே தெரிவித்துள்ளார்.

பொல்கஹவெல, அம்பேபுஸ்ஸ, நீர்கொழும்பு, பாணந்துறையில் இருந்து கொழும்பு கோட்டை வரை சேவையில் ஈடுபடவிருந்த ரயில்களே இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, காலியில் இருந்து கொழும்பு கோட்டை வரை சேவையில் ஈடுபடுத்தப்படவிருந்த விசேட ரயிலும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. இருப்பினும் பதுளையிலிருந்து கொழும்பு கோட்டைக்கான விசேட ரயில் சேவைகள் வழமை போன்று இடம்பெறுகின்றன.

# கோட்டையில் விபத்திற்குள்ளான ரயிலின் சாரதி பணி இடைநீக்கம்

கொழும்பு கோட்டை ரயில் நிலை யத்தின் முதலாவது மேடையில் ரயிலொன்று மோதி விபத்திற்குள்ளான சம்பவத்துடன் தொடர்புடைய ரயில் சாரதி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ரயில்வே பொதுமுகாமையாளர் எச்.எம். கே.டபிள்யூ. பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை சிலாபம் நோக்கி பயணித்த ரயிலொன்று கோட்டை ரயில் நிலையத்தின் முதலா வது மேடையில் மோதி விபத்திற் குள்ளானது.



விபத்தினால் மேடை கடுமையாகச் சேதமடைந்த போதிலும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. பின்னர் அந்த ரயிலுக்கு பதிலாக வேறு ரயில் சேவை யில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.



# அதிவேக நெடுஞ்சாலைகளில் வருமானம் ஆறு நாள்களில் மட்டும் 23.5 கோடி ரூபா

கடந்த 6 நாள்களில் அதிவேக நெடுஞ்சாலைகளில் சுமார் 6 லட்சத்து 74 ஆயிரம் வாகனங்கள் பயணித்துள்ளன என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் சுமார் 235 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அதிவேக நெடுஞ்சாலைகளை பயன்படுத்தும் போது வாகனங்களின் நிலைமை குறித்து அதிக கவனம் செலுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை சாரதிகளை அறிவுறுத்தியுள்ளது.

கடந்த சில நாள்களில் மாத்திரம் அதிவேக நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட வீதிகளில் 53 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளன என அந்த அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு விடுமுறையையடுத்து, அதிவேக நெடுஞ்சாலைகளின் பாவனை அதிகரித்துள்ளமையினால் அவற்றின் ஊடாக பயணிக்கும் வாகனங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சோபிக்கார் விஜயதாஸ!

வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஆசையை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் பகிரங்கமாக வெளியிட்டிருக்கின்றார்.

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன இவரைத் தமது சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திற்கு அழைத்திருந்தார். அங்கு மைத்திரிபால சிறிசேனவும் அவரது சகாக்களும் வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஆசையை விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு ஊட்டினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமது தலைமையில் உருவாகவிருக்கும் புதிய அரசியல் கூட்டணியின் வேட்பாளராக விஜயதாஸ ராஜபக்ஷவை நிறுத்தலாம் என்ற நப்பாசையைத்தான் மைத்திரியும் அங்கிருந்த ஏனையோரும் அவருக்கு வழங்கினர் எனக் கூறப்படுகின்றது.

அந்தக் கயிற்றை விழுங்கிக் கொண்டுள்ள விஜயதாஸ ராஜபக்ஷ அது பற்றிய விடயத்தை இப்போது பகிரங்கமாக அறிவித்துருக்கின்றார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் என்னை வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார்கள். அதனால் அவ்விடயம் குறித்து விரைவில் நான் முடிவு செய்து அறிவிக்க வேண்டியுள்ளது" - என்று அவர் கூறியிருக்கின்றார்.

ஆனால், ஜனாதிபதித்தேர்தலில்அவரைப் போட்டியிட வெற்றிலை வைத்த சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன இப்போது அந்தப் பதவியில் இல்லை. அவரது தலைமைத்துவத்திற்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியுள்ளது.

விஜயதாஸ ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அழைத்த சுதந்திரக் கட்சியின் செயற்குழுவும் இன்று குழப்பத்தில் உள்ளது. கட்சியே யாரின் கைகளில் உள்ளது, எது செயற்குழு, அரசியல் குழுவில் யார் இருக்கின்றார்கள் என்பவை எல்லாம் குழப்பத்தில் உள்ளன.

நீதிமன்றத்தில் தீர்க்கமான சில முடிவுகள் எடுக்கப்படும் வரை சு.கவின் நிலைமை இப்படி இழுபறியாக இருக்கும் என்பது திண்ணம்.

அவ்வாறு இழுபறியில் இருக்கும் ஒரு கட்சியின் பின்புலத்தை நம்பி விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் இறங்குவது என்பது மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாகத்தான் முடியும்.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள், இங்குள்ள கட்சிகளைப் பார்த்து வாக்களிக்க மாட்டார்கள் என்றும் போட்டியிடும் வேட்பாளர்களைப் பார்த்துதான் வாக்களிப்பார்கள் என்றும் கூறும் விஜயதாஸ ராஜபக்ஷ, கட்சிகள் மீதான மக்களின் நம்பிக்கை பொய்த்தே போய்விட்டது, அது எல்லோருக்குமே நன்கு தெரியும் என்றும் கூறுகின்றார்.

அவர் கூறுவது உண்மைதான். மக்களின் நம்பிக்கை பொய்த்துத்தான் போய் விட்டது. தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள்.

ஆனால் மாற்று அரசியல் தலைமைத்துவமாக விஜயதாஸ ராஜபக்ஷவை மக்கள் சிந்திக்கும் நிலைமை ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை என்பதுதான் கள யதார்த்தம்.

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இருக்கும் ஏனைய வேட்பாளர்களை விட ஒன்றும் சிறப்பும் மக்கள் கவர்ச்சியும் திறமையும் கொண்டவர் அல்லர் விஜயதாஸ ராஜபக்ஷ.

அவர் பேரினவாதப் போக்குக் கொண்டவர். பௌத்த - சிங்களப் பெரும் தேசியவாதச் சிந்தனை மிக்கவர். அதனால் பௌத்த மத பீடங்களுடன் நெருக்கமானவர். பேரினப் போக்கு கொண்டவர் என்பதால் சிறுபான்மை இன வாக்குகள் எக்காரணம் கொண்டும் அவருக்கு கிட்டா. அதே சமயம் பேரினப் போக்குக் கொண்ட தென்னிலங்கை பௌத்த - சிங்கள மக்கள் மத்தியிலும் வசீகரமும் தனிக் கவர்ச்சியும் கொண்ட அரசியல் தலைவரும் அல்லர் அவர்.

இந்தப் பின்புலங்களில், இலகுவாக ஊட்டக்கூடிய பேரினவாத மேலாண்மை வெறிப்போக்கைத் தட்டி விட்டு கூட வாக்குச் சுருட்டக் கூடிய கவர்ச்சியும் வசீகரமும் அவரிடம் இல்லை.

இத்தகைய ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராகி ஒன்றும் பெரிதாகச் சாதித்து விடப் போவதில்லை என்பது வெளிப்படையானது.

# நீண்ட சட்டப் போராட்டம்:

## இந்திய மக்களவைத் தேர்தலில் வாக்களிக்கின்றார் இலங்கை பெண்

இந்தியாவில் அகதிகள் முகாமில் உள்ள இலங்கை பெண் ஒருவருக்கு, நீண்ட சட்டப் போராட்டத்தின் பின் இந்திய மக்களவைத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

38 வயதான நளினி கிருபாகரன், தனது கனவு நனவாகியிருப்பதாகவும் தற்போது தான் ஒரு இந்தியன் என்பதை உறுதி செய்துள்ளதாகவும் மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

தமிழகத்தின் திருச்சி மாவட்டத்தில் கோட்டப்பட்டு பகுதியில் அமைந்துள்ள இலங்கை தமிழர்களின் மறுவாழ்வு முகாமில் தங்கியிருக்கும் நளினி கிருபாகரன், கடந்த 1986 ஆம் ஆண்டு இராமேஸ்வரத்தில் உள்ள மண்டபம் முகாமில் பிறந்துள்ளார்.

2021 ஆம் ஆண்டில் அவர் கடவுச்சீட்டுக்காக விண்ணப்பித்த போது, அது மறுக்கப்பட்டது. இதனால், நளினி கிருபாகரன் சட்டப்போராட்டத்தை கையில் எடுத்தார்.

மண்டபம் பகுதியில் அவர் பிறந்ததற்கான பிறப்புச் சான்றிதழ் வைத்திருப்பதால், நளினிக்கு இந்திய கடவுச்சீட்டினை வழங்குமாறு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை கடந்த 2022 ஆம் ஆண்டு உத்தரவிட்டது.

அதாவது, இந்திய குடியுரிமைச் சட்டம் 1995 இன் படி, 1950 ஜனவரி 26 முதல் 1987ஆம் ஆண்டு ஜுலை 1 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில், இந்தியாவில் பிறக்கும் எவரும் இந்திய குடிமகனாவார் என பிரிவு 3 வரையறுக்கிறது.

அவருக்கு கடவுச்சீட்டு கிடைத்த பிறகும், மாவட்ட ஆட்சியரின் சிறப்பு அனுமதியின் பேரில், அகதி முகாமிலேயே தனது குடும்பத்துடன் தங்கியிருந்தார்.



இந்த வாரத் தொடக்கத்தில் நளினிக்கு வாக்காளர் அடையாள அட்டை கிடைத்துள்ளது. இந்த உரிமை, தன்னுடன் முகாமில் தங்கியிருக்கும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என அவர் விரும்புகிறார்.

பல ஆண்டு காலமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கும் கட்சிக்கு தனது வாக்கினை செலுத்தப் போவதாக நளினி கூறியுள்ளார்.

அத்துடன், இந்தியாவில் பிறந்த தனது இரண்டு பிள்ளைகளுக்கும் இந்திய குடியுரிமை பெறுவதற்காக போராடிக்கொண்டிருப்பதாகவும் நளினி குறிப்பிட்டுள்ளார்.

# ஒடிசா மாநிலத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 5 பேர் உயிரிழப்பு









இந்தியாவின் - ஒடிசா மாநிலத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜெய்பூர் மாவட்ட தேசிய நெடுஞ்சாலையின் பாரபதி பாலத்தில், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஒடிசாவில் இருந்து கொல்கத்தா நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்தில் பெண் ஒருவர் உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 40 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், அவர்கள் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது

# இஸ்ரேல் – ஈரான் மோதல்:

## இந்த உலகம் இன்னொரு போரை தாங்காது என்கிறார் குட்டடெரஸ்



மத்திய கிழக்கு பிராந்தியமோ, இந்த உலகமோ இன்னொரு போரைத் தாங்காது என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டடெரஸ் கவலை வெளியிட்டுள்ளார்.

உலகில் அமைதியை நிலைநாட்டும் கூட்டுப்பொறுப்பு அனைவருக்கும் இருப்பதாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் மீண்டும் தமது நாட்டில் தாக்குதல் மேற்கொண்டால், இதுவரை எவரும் பயன்படுத்தாத ஆயுதங்களை கையில் எடுக்கப்போவதாக ஈரான் எச்சரித்துள்ள நிலையில், அன்டோனியோ குட்டடெரஸ் அதற்கு தனது கவலையை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இஸ்ரேல் இராணுவத் தலைவர் ஹெர்ஸி ஹலேவி, ஈரானின் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதாகவும் பிரதமர் நெதன்யாகுவின் தீர்மானத்திற்காக காத்திருப்பதாகவும் கூறியிருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி பகேரி, இஸ்ரேல் மீண்டும் தங்களைத் தாக்கினால், இதுவரை பயன்படுத்தாத ஆயுதங்களை பயன்படுத்தி சில நொடிகளில் பதிலடி கொடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஈரான் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 300 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது.

சுமார் 5 மணி நேரம் நடந்த இந்த தாக்குதலில், 99 வீத தாக்குதல்களை நடுவானில் இடைமறித்து அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய படைகள் அழித்தன.

இஸ்ரேல் மீது ஈரான் ஏவிய ட்ரோன்களில் 80 வீதத்தை அமெரிக்கா வீழ்த்தியது.

ஈரான், ஏமனில் இருந்து ஏவப்பட்ட 6 ஏவுகணைகளை வீழ்த்தியது. இந்த தாக்குதல் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும் என அஞ்சப்படுகிறது.

# பதவி விலகினர் சிங்கப்பூர் பிரதமர்!



சிங்கப்பூர் பிரதமர் லீ சியென் லூங் அடுத்த மாதம் 15ஆம் திகதியுடன் பதவி விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

சிங்கப்பூரின் 3 ஆவது பிரதமரான இவர், கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் மக்கள் செயல் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்து வருகிறார்.

சிங்கப்பூரில் பிரதமர் லீ சியென் லூங் தலைமையிலான மக்கள் செயல் கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகின்றது.

அண்மைக் காலமாக இந்த கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஊழல் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக 02 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகியுள்ளனர். பிரதமர் லீ சியென் லூங்கும் அடுத்த மாதம் (மே) 15ஆம் திகதி பதவி விலகப் போகிறேன் என அறிவித்துள்ளார்.

பதவி விலகும் அதேநாளில் லாரன்ஸ் வோங் பிரதமராக பதவியேற்பார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மெக்சிகோவில் உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதில் மூவர் பலி!



தெற்கு மெக்சிகோ பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்று விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

அந்த உலங்கு வானூர்தி கட்டுப்பாட்டை இழந்த நிலையில் கட்டடம் ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தில் விமானி மற்றும் இரண்டு பயணிகளே உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் விபத்துக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.






# தீர்வுக்கு ஒரே வழிமுறை தேசிய நல்லிணக்கமே!

## யாழ்.பல்கலை ஜனநாயக ஊழியர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் டக்ளஸ்

சரியான திசை நோக்கி பயணிப்பதன் ஊடாகவே எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய நல்லிணக்கமே சாத்தியமான வழிமுறை எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 90 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தேசிய நீரோட்டத்தில் கலந்துகொண்டு நாடாளுமன்ற ஜனநாயகத்தினை பயன்படுத்தி தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வினை காண்பதற்கான பயணத்தினை முன்னெடுத்து வருகின்றேன்.

இதன்மூலம் பல்வேறு நன்மைகளும் எமது மக்களுக்கு கிடைத்திருக்கின்றன. குறிப்பாக, அறிவியல் நகரை விடுவித்து, பொறியியல் பீடத்தினை அங்கு உருவாக்குவதற்கு தேசிய நல்லிணக்கமே காரணமாக அமைந்திருந்தது.

அதேபோன்று எதிர்காலத்திலும் எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஒரு தேசிய நல்லிணக்கப் பொறிமுறையே நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும். இந்த யதார்த்தத்தினை புரிந்து கொண்டு யாழ் பல்கலைக் கழகத்தின் தேசிய ஊழியர் சங்கத்தினராகிய நீங் களும் உங்களுடைய முன்னெடுப்புக் களை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.










# வவுனியா வடக்கில் இடம்பெற்ற வடக்கு மாகாண புத்தாண்டு விழா

(கே.வசந்தன்)

வடக்கு மாகாண புத்தாண்டு விழா வவுனியா வடக்கு நெடுங்கணி மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு துறை, வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம், தொழில்துறை திணைக்களம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலகம், வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகம் ஆகியன இணைந்து நடத்திய இந்த நிகழ்வு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது பாரம்பரிய முறையில் விருந்தினர்களை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றது. தமிழ் சிங்கள கலை நிகழ்வுகள், பாரம்பரிய விளையாட்டுக்கள், மறைந்து செல்லும் தமிழர் பாரம்பரிய கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகள், பாரம்பரிய உணவு கண்காட்சிகளும் இடம் பெற்றிருந்தன.

வவுனியா மாவட்டச் செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன், அரச அதிகாரிகள், வவுனியா வடக்கு கல்வி வலய அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.















### வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயக் கைது தொடர்பில்

# வவுனியா மனித உரிமை ஆணைக்குழு நேற்று தொல்பொருள் திணைக்களத்திடம் விசாரணை

(கே.வசந்தன்)

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் வைத்து ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் வவுனியா மனிதவுரிமை ஆணைக்குழுவினரால் தொல்பொருள் திணைக்களத்திடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா, உள்வட்ட வீதியில் அமைந்துள்ள மனிதவுரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு நேற்றைய அழைக்கப்பட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் ஆகியோரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டமையுடன், வாக்கு மூலங்களும் பெறப்பட்டன.

இதன்போது, தொல்பொருள் சின்னத்திற்குசேதம்ஏற்பட்டுத்தப்பட்டதாகவும் தாம் கடந்த மாதம் 9 ஆம் திகதி காலை அங்கு சென்று பார்த்த போது சேதம் ஏற்பட்டு இருந்ததாகவும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், மனிதவுரிமைகள் ஆணைக்கழுவிடம் தெரிவித்திருந்தனர்.

விசாரணைகளின் முடிவில் வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய செயலாளர் மு.தமிழ்செல்வன் கருத்து தெரிவிக்கையில் –

கடந்த மாதம் 8 ஆம் திகதி சிவாரத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரை நெடுங்கேணி பொலிஸார் கைது செய்து எம்மை சிறையில் அடைத்தனர். அதனைத் தொடர்ந்து எமது உறவினர்கள் வவுனியா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய 8 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு விசாரணைகள் தொல்பொருள் திணைக்களத்துடன் இடம்பெற்றது.

இதன்போது தொல்பொருள் திணைக்களத்தினர் நாங்கள் தொல்லியல் சின்னங்களை சேதப்படுத்தியதாக ஆவணங்களை காண்பித்தனர். அதன் போது மலை உச்சியில் நெருப்பு மூட்டியமைக்கான புகைப்படம் ஒன்றை சமர்ப்பித்து இருந்தனர்.

அதனை நாம் உடனடியாக மறுதலித்தோம். காரணம் சிவராத்திரி தினத்தன்று காலையில் இருந்து மாலை 4.30 வரை தொல்பொருள் திணைக்களத்தினர் அங்கு நின்றிருந்தனர். நாங்கள் அப்போதும் சரி, அதற்கு பின்னரும் சரி மலை உச்சியில் கொளுத்தவில்லை. அவர்கள் மறுநாள் 9 ஆம் திகதிதான் அங்கு சென்று பார்வையிட்டனர் எனக் கூறியிருந்தனர். நாங்கள் 8 ஆம் திகதி பூஜைக்கு சென்ற போதே அவை கொளுத்தப்பட்டு இருந்தன. அங்கு முதல் நாள் இரவு கடமையில் இருந்த பொலிஸாரே அதனைக் கொளுத்தினர் எனத் தெரிவித்தோம்.

இவர்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களை சொல்லியுள்ளார்கள். அடுத்த கட்ட விசாரணை எமக்கும், நெடுக்கேணி பொலிஸாருக்கும், வனவளத் திணைக்களத்திற்கும் இடம்பெறும் என மனிதவுரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவித்தார்.



# பொலிஸார் என்னைப் பிடித்து வைத்திருக்க வெளிநாட்டில் இருந்து வந்தவர் தாக்கினார்!

## புளியங்குளம் பொலிஸில் நடந்ததாக ஒருவர் முறைப்பாடு



(வவுனியா நிருபர்)

வெளிநாட்டில் இருந்து வருகைதந்த நபர் ஒருவருடன் சேர்ந்து புளியங்குளம் பொலிஸார் தன்னைத் தாக்கினர் எனத் தெரிவித்து வவுனியா வைத்தியசாலையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, சின்னப்பூவரசங்குளத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர் ஊடகங்களுக்கு தெரிவித்தவை வருமாறு:-

திங்களன்று விசாரணை ஒன்று இருப்பதாக புளியங்குளம் பொலிஸார் என்னை அழைத்தனர். நான் அங்கு சென்ற நிலையில் எனது தொலைபேசி, கைப்பை என்பன பறிக்கப்பட்டு இரு கையிலும் விலங்கு போடப்பட்டது.

பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உட்பட ஏனைய பொலிஸார் என்னைப் பிடித்து வைத்திருக்க, வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருந்த நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து என்னைத் தாக்கியிருந்தார்.

பின்னர் நாய்போல என்னை இழுத்துச் சென்ற அவர்கள் வெளிநாட்டில் இருந்து வந்த நபரின் வாகனத்தில் ஏற்ற முற்பட்டனர். இதன்போது நான் பொது மக்களின் உதவியை நாடி பிரதான வீதியை மறித்திருந்தேன். பின்னர் மீண்டும் என்னை பொலிஸ் நிலையத்திற்குள் இழுத்துச் சென்றனர். அங்கு பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி அவரது சப்பாத்து கால்களால் எனது நெஞ்சில் தாக்கினார்.

பின்னர் அங்கு வந்த பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர், என்னிடம் வாக்குமூலம் பெற்றுவிட்டு பொலிஸ் நிலையத்தில் இருந்து என்னையும் எனது மனைவி பிள்ளைகளையும் வீட்டிற்கு அனுப்பியிருந்தார். பொலிஸார் தாக்கியதால் எனது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன் என்றார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக தாக்கப்பட்டவரின் மனைவி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளமையுடன் வைத்தியசாலை பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளார்.

# மருதமுனை பிரதேசங்களில் இயங்கிய போலி மருத்துவ நிலையம் முற்றுகை!

## போலி வைத்தியரும் அகப்பட்டார்



(நூருல் ஹுதா உமர்)

பொது மக்களின் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக அமையும் இடங்கள் மீதான தொடர் சுற்றிவளைப்பில் சட்டவிரோத மருத்துவ நிலையம் ஒன்று நேற்று, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை ஆகிய பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்டு அந்த நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு தொடர்ந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஷகீலா இஸ்ஸதீன் வழிகாட்டலில் இந்தத் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

இந்த சுற்றிவளைப்பின் போது தன்னை வைத்தியராக அடையாளம் காட்டிக்கொண்டு எவ்வித அரச அங்கீகாரமுமின்றி இயங்கிவந்த மருத்துவ நிலையமும், அழகுக்கலை நிலையமும், பயற்சி நிலையமும் நடத்தி வந்த நபர் இணங்காணப்பட்டார்.

அவரிடமிருந்த மனித பாவனைக்குப் பொருத்தமற்ற மற்றும் ஆபத்தான மருந்துகளும் மீட்கப்பட்டுள்ளன. முறையான கல்வித் தகைமையோ, தொழில் தகைமையோ இல்லாத அந்த நபர் மருத்துவப் பரிந்துரைகள் வழங்கி மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனுமதியில்லாத மருந்துகளைப் பாவித்து வந்தமையும் இதன்போது கண்டறியப்பட்டது. அவர் மருத்துவராகத் தன்னை அடையாளப்படுத்திய சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர பிரதேசத்தில் மூன்று கிளைகளைக் கொண்டு இயங்கிய இந்த நிலையம் மனித உயிர்களுக்கும், சுகாதார நிலைக்கும் சவால் விடும் வகையில் செயற்பட்டு வந்தமையைக் கண்டறிந்து இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை சுகாதாரத்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் திடீர் சுற்றிவளைப்பில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி, கல்முனை பிராந்திய சுற்றாடல் உணவு பாதுகாப்பு பொறுப்பு வைத்தியதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம். பௌஸாத், கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரியும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் எம்.ஜெ.கே.எம். அர்சத் காரியப்பர், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராசா, மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களான ஏ.எம். பாறுக், ஏ.எல்.எம். ஜெரின், பொதுச் சுகாதார பரிசோதகர்களான ஜே.எம். நஜிமுதீன், ஐ.எல்.எம்.இத்ரீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.04.2024




இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப் படும் நாள்.எந்த முயற்சி எடுத்தாலும் அதை குறித்த நேரத்தில் முடிப்பது சிறிது கடினமாக இருக்கும்.நீங்கள் பிறரிடம் உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின்பணிச்சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக காணப் படாது.உங்களின் கடின உழைப்பிற்காக நல்ல பெயரை பெற முடியாத சூழல் காணப்படும்.

உங்கள் துணையால் நீங்கள் புறக்கணிக்கப் படுவது போல உணர்வீர்கள். இம்மாதிரியான உணர்வுகளை தவிர்த்து இன்றைய நாளை சந்தோஷமான நாளாக ஆக்குங்கள்.

அதிகரிக்கும் குடும்ப பொறுப்புகள் காரணமாக இன்று அதிகமாக செலவு செய்ய நேரும்.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். உங்களின் மனநிலையின் மூலம் இது சாத்தியம்.உங்கள்நோக்கம் நிறைவேறும் வகையிலான நல்ல முடிவு களை நீங்கள் எடுப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் பணியில் முன்னனியில் இருப்பீர்கள்.உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசி இன்றைய நாளை சந்தோஷமாக கழிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை உங்கள் சொந்த தேவைக்கு பயன்படுத்துவீர்கள் மற்றும் சேமிப்பீர்கள். நம்பிக் கையுணர்வு இருபதாக உணர்வீர்கள்.




உங்கள் ஆற்றலை குறைக்கும் விதத்தில் உங்கள் மனதில் அவநம்பிக் கையான உணர்வுகள் தோன்றும். நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் செயல்பட்டால் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம்.

இன்று பணிச்சுமை கடினமாக காணப்படும்.இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.ஆரோக்கியக் குறைபாடு காரணமாக உங்கள் பணிகளை விரைந்து ஆற்ற இயலாது. நீங்கள் ஆவேசமான மன நிலையில் காணப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று குறைவான பண வளர்ச்சி காரணமாக குறைந்த பண வரவு காணப்படும்.




இன்று அசௌகரியங்கள் காணப்படும். அதற்கு உங்கள் மனஅழுத்தங்கள் கார ணமாக இருக்கலாம்.மனஅழுத்தத்தைக் குறைக்க நல்ல இசையை கேட்பது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள் ளுங்கள்.மகிழ்ச்சி கிடைக்கும்.

உங்கள் பணிகளை சமாளிப்பது கடினமாக காண்பீர்கள். எனவே திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றிக்கு வழி கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவில் அமைதியையும் நல்லினக்கதையும் பாதிக்கும்.

இன்று பணத்தை கையாள்வது கடினமாக இருக்கும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.




இன்று சிறந்த நாளாக இருக்கும். நீங்கள் இன்று விரைந்து செயலாற்று வீர்கள். இதனால் திருப்தி ஏற்படும். இன்று பயணங்களால் ஆதாயம் ஏற்படும். இன்று வளர்ச்சி பெறுவது உறுதி.

இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மும்மரமாக ஈடுபடுவீர்கள். உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள்.

உங்கள் நலன் குறித்த முக்கிய முடிவு எடுக்க உங்கள் துணை உங்களுக்கு வழி காட்டுவார். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இன்று பணவரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக இருக்கும்.




இன்று உங்களுக்கு முன்னேற்றம் எளிதில் கிடைக்கும்.சிறிதளவு முயற்சியாயினும் வெற்றி நிச்சயம். உங்கள் திறமை வெளிஉலகத்தில் பளிச்செனத் தெரியும்.இன்று தன்னம் பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணிகள் மிக அதிகமாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்புக்களுக்கு நீங்கள் முயலலாம்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இது உங்கள் துணையை திருப்திபடுத்தும்.

இன்று உங்களிடம் பணம் மிகுதியாக காணப்படும். அதை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் தைரியம் மற்றும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப் படும்.உங்கள் சிறிய முயற்சியின் மூலம் பெரிய வெற்றி காண்பீர் கள்.இன்று நீங்கள் மிகுந்த நம்பிக் கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணி சம்பந்தப்பட்ட முக்கியமானசந்திப்பில்நீங்கள்மூழ்கியிருப்பீர்கள்.இந்த சந்திப்பில் உங்கள் உரையாடலைக் கண்டு உங்கள் சகபணியாளர்கள் ஆச்சரியமடைவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று சீரான ஆரோக்கியம் காணப்படும். தேக ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணி யாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.04.2024




இன்று மந்தமாக காணப்படுவீர்கள். சுறுசுறுப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.நல்லதையே நினையுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும். உங்கள் சகபணியாளர்களுடனான உங்கள் தொடர்பாடல் நற்பலன்களை அளிக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்து நட்புடன் பழகுவது நல்லது.

இன்று செலவுகள்தவிர்க்க முடியாது. எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. முதுகு வலி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு உகந்த நாள்.நீங்கள் உங்களுக்கென சில செயல்களை அமைத்துக் கொண்டு அதில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.இன்று பணம் மிகுதியாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் நல்ல காரியங்களுக்கு பயன் செய்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு சௌகரியங்கள் வழங்கும் என்பதால் நீங்கள் இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும்.நீங்கள்செய்யும் செயல்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக முடியும். நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக் கும்.உங்கள் திறமைகள் பாராட்டைப் பெறும்.உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான நினைவுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இன்று உங்களிடம் காணப்படும் அதிகப்படியான ஆற்றல் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்புடன் வைத்திருக்கும்.




இன்று குறைந்த பலன்களே கிடைக்கும்.இன்று சில ஏமாற்றங்களைக் காண்பீர்கள்.எல்லாவற்றையும் நட்பு முறையோடு அணுகுங்கள்.

நீங்கள் அதிகமாக பணியாற்ற வேண்டியிருக்கும்.அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.பணியாற்றும் முறையை திட்டமிட்டுஅதற்கேற்றாற் போல செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இனிமையான வார்த்தைகளைப் பேச வேண்டும். துணையின் விருப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.





